

இலங்கைத் தமிழரும் தமிழும்
இணையவழி ஆய்வரங்கம்
நிறைவுரை
திரு. ச.லலீசன் அவர்கள்
தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், இலங்கை
ஒருங்கிணைப்பாளர்கள்
திருமதி ஜ.ஜான்சிராணி அவர்கள்
ஆய்வு வளமையர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
செல்வி பெ.செல்வராணி அவர்கள்
கணினி செயல்முறையாளர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
ஆய்வரங்கத்தில் பங்கேற்க...
* ஆய்வரங்கம் ஜூம் (zoom) செயலி வழியே நடைபெறும்.
* நிகழ்வில் பங்கேற்க இணைப்பில் உள்ள கூகுள் படிவத்தின் வாயிலாகப் பதிவு செய்து கொள்ளவும் (முன்பதிவு அவசியம்).
* ஆய்வரங்கத்தில் முறையாகத் தமிழில் பதிவு செய்து அனைத்து அமர்வுகளிலும் பங்கேற்பவர்களுக்கு மின் சான்றிதழ் வழங்கப்படும்
* ஆய்வரங்க இணைப்பு, பதிவு செய்யும் அனைவருக்கும் மின்னஞ்சல் வழியாக அனுப்பப்படும்
கூட்ட அடையாள எண் (Meeting ID) : 477 159 8996
நுழைவுச்சொல் (Password) : wts
* கட்செவி எண் : 9445912314 மின்னஞ்சல் முகவரி : utsmdu1@gmail.com
வலைத்தள முகவரி : utsmdu.org
குறிப்பு:-
இந்நிகழ்வை வலையொளியில் (youtube) நேரலையில் காண : 'உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை'
தனித்திரு! விழித்திரு!! விலகியிரு!!!




உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், இலங்கை
இணைந்து நடத்தும்
இலங்கைத் தமிழரும் தமிழும்
இணையவழி ஆய்வரங்கம்
திருவள்ளுவர் ஆண்டு 2051 - சார்வரி, ஆடி' 12 - ஆவணி' 5
நாள்: 27.07.2020 (திங்கள்) - 21.08.2020 (வெள்ளி)
நேரம் : பிற்பகல் 4.00 - 5.00 மணி
சிறப்புரை
முனைவர் கோ.விசயராகவன் அவர்கள்
இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை
தலைமையுரை
முனைவர் ப.அன்புச்செழியன் அவர்கள்
இயக்குநர் (பொ.), உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
ஆய்வரங்க விளக்கவுரை
பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள்
வாழ்நாள் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
பெருந்தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்



இலங்கைத் தமிழரும் தமிழும்
ஆய்வரங்க அமர்வுகள்
இலங்கைத் தமிழரின் நிலை
கடந்தகாலத் தமிழரின் நிலை
முனைவர் ப.புஷ்பரட்ணம் அவர்கள்
தலைவர், தொல்லியல் வரலாற்றுத் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
27.07.2020
நிகழ்கால – எதிர்காலத் தமிழரின் நிலை
முனைவர் கே.ரீ.கணேசலிங்கம் அவர்கள்
தலைவர், அரசறிவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
28.07.2020
இலங்கைத் தமிழ் இலக்கியம்
இலங்கை மரபுத் தமிழ் இலக்கியம்
முனைவர் சி.சிவலிங்கராஜா அவர்கள்
மேனாள் தலைவர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
29.07.2020
இலங்கைத் தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்பு
முனைவர் ச.மனோன்மணி அவர்கள்
துணைத்தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், இலங்கை
30.07.2020
இலங்கை நவீனத் தமிழிலக்கியம்
முனைவர் ம.இரகுநாதன் அவர்கள்
தலைவர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
31.07.2020




இலங்கைத் தமிழரும் தமிழும்
ஆய்வரங்க அமர்வுகள்
புலம்பெயர் தமிழ் இலக்கியம்
முனைவர் சு.குணேஸ்வரன் அவர்கள்
ஆசிரியர், இலங்கை
03.08.2020
இலங்கைத் தமிழ் இலக்கியப் பதிப்பு முயற்சிகள்
முனைவர் ஸ்ரீ.பிரசாந்தன் அவர்கள்
பேராசிரியர், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை
04.08.2020
இலங்கையில் தொல்காப்பிய சங்க இலக்கியக் கற்கை
முனைவர் ந.அரங்கநாதன் அவர்கள்
பேராசிரியர், இலங்கை
05.08.2020
இலங்கையில் தமிழ்க் கல்வி
இலங்கையில் மரபுவழித் தமிழ்க் கல்வி
முனைவர் ஜெயலக்குமி இராசநாயகம் அவர்கள்
தலைவர், கல்வியியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
06.08.2020
இலங்கையில் மேலைத் தேயத்தவர் வருகையும்
தமிழ்க் கல்வி மாற்றமும்
முனைவர் த.கலாமணி அவர்கள்
மேனாள் விரிவுரையாளர், கல்வியியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
07.08.2020


இலங்கைத் தமிழரும் தமிழும்
ஆய்வரங்க அமர்வுகள்
இலங்கையில் தமிழ்வழிக் கல்வியும் பாடநூல்களும்
முனைவர் அனுசியா சத்தியசீலன் அவர்கள்
பேராசிரியர், கல்வியியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
10.08.2020
இலங்கைத் தமிழர் கலைகள்
இலங்கைத் தமிழர் இசை மரபு
முனைவர் சுகன்யா அரவிந்தன் அவர்கள்
முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
11.08.2020
இலங்கைத் தமிழர் ஆடல் கலை மரபு
முனைவர் கிருசாந்தி இரவீந்திரா அவர்கள்
நிறுவனர் (ம) இயக்குநர், நாட்டிய கலாகேந்திரா, இலங்கை
12.08.2020
இலங்கைக் கோயிற் கலைகள்
முனைவர் வ.மகேஸ்வரன் அவர்கள்
பேராசிரியர், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை
13.08.2020
இலங்கைத் தமிழர் கூத்து மரபு
முனைவர் சி.மௌனகுரு அவர்கள்
மேனாள் தலைவர், நுண்கலைத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
14.08.2020


இலங்கைத் தமிழரும் தமிழும்
ஆய்வரங்க அமர்வுகள்
இலங்கைத் தமிழர் நாட்டார் கலைகள்
முனைவர் சி.ஜெய்சங்கர் அவர்கள்
முதுநிலை விரிவுரையாளர், நுண்கலைத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
17.08.2020
இலங்கைத் தமிழ் ஊடகங்கள்
இலங்கைத் தமிழ் இதழ்கள்
முனைவர் ம.அப்துல்லா றமீஸ் அவர்கள்
பேராசிரியர், தமிழ்த்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
18.08.2020
இலங்கைத் தமிழ் இலத்திரனியல் ஊடகங்கள்
முனைவர் சி.ரகுராம் அவர்கள்
தலைவர், ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
19.08.2020
இலங்கைத் தமிழ் ஊடகங்களின் மொழிப்பயன்பாடு
முனைவர் க.ரகுபரன் அவர்கள்
விரிவுரையாளர், மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
20.08.2020
இலங்கைத் தமிழ்ச் சிற்றிதழ்கள்
முனைவர் அம்மன்கிளி முருகதாஸ் அவர்கள்
பணிப்பாளர், சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கைகள்
நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
21.08.2020

**உலகத் தமிழ்ச் சங்கமும்**

**யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும்**

**இணைந்து நடத்தும் இணையவழிக் கருத்தரங்குகள்**

**சூலை 27 – ஆகத்து 21, 2020**

**கருப்பொருள்: இலங்கைத் தமிழரும் தமிழும்**

| | | | |
|---|---|---|---|
| | **இலங்கைத் தமிழரின் நிலை:** | | |
| 1. | 27.07.2020 | கடந்தகாலத் தமிழர் நிலை | பேராசிரியர் முனைவர் ப. புஷ்பரட்ணம்<br>தொலைபேசி: +94 776006402 |
| 2. | 28.07.2020 | நிகழ்கால – எதிர்காலத் தமிழர்நிலை | முனைவர் கே.ரி. கணேசலிங்கம்<br>தொலைபேசி: +94 775048894 |
| | **இலங்கைத் தமிழிலக்கியம்:** | | |
| 3. | 29.07.2020 | இலங்கை மரபுத் தமிழ் இலக்கியம் | முனைவர் எஸ். சிவலிங்கராஜா,<br>தொலைபேசி: +94 778696310 |
| 4. | 30.07.2020 | இலங்கைத் தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்பு | முனைவர் ச. மனோன்மணி<br>தொலைபேசி: +94 774431869 |
| 5. | 31.07..2020 | இலங்கை நவீன தமிழிலக்கியம் | பேராசிரியர் முனைவர்ம. இரகுநாதன்<br>தொலைபேசி: +94 779788735 |
| 6. | 03.08.2020 | புலம்பெயர் தமிழ் இலக்கியம் | முனைவர் க. குணேஸ்வரன்<br>தொலைபேசி: +94 776120049 |

| | | | |
|---|---|---|---|
| 7. | 04.08.2020 | இலங்கைத் தமிழ் இலக்கியப் பதிப்பு முயற்சிகள் | பேராசிரியர் முனைவர் ஸ்ரீ. பிரசாந்தன்<br>தொலைபேசி: +94 773053241 |
| 8. | 05.08.2020 | இலங்கையில் தொல்காப்பிய சங்க இலக்கியக் கற்கை | முனைவர்ந. அரங்கராசன்<br>தொலைபேசி: +94 770686138 |
| | **இலங்கையில் தமிழர் கல்வி:** | | |
| 9. | 06.08.2020 | இலங்கையில் மரபுவழித் தமிழ்க் கல்வி | முனைவர் ஜெயலக்குமி இராசநாயகம்,<br>தொலைபேசி: +94 776905087 |
| 10. | 07.08.2020 | இலங்கையில் மேலைத்தேயத்தவர் வருகையும் தமிழ்க் கல்வி மாற்றமும் | முனைவர் த. கலாமணி<br>தொலைபேசி: +94 212262225 |
| 11. | 10.08.2020 | இலங்கையில் தமிழ்வழிக் கல்வியும் பாடநூல்களும் - | முனைவர் அனுசியா சத்தியசீலன்<br>தொலைபேசி: +94 775224838 |
| | **இலங்கைத் தமிழ்க் கலைகள்** | | |
| 12. | 11.08.2020 | இலங்கைத் தமிழர் இசைமரபு | முனைவர் சுகன்யா அரவிந்தன்<br>தொலைபேசி: +94 773166799 |
| !3. | 12.08.2020 | இலங்கைத் தமிழர் ஆடல்மரபு | முனைவர் கிருசாந்தி இரவீந்திரா<br>தொலைபேசி: +94 771602390 |

| | | | |
|---|---|---|---|
| 14. | 13.08.2020 | இலங்கைக் கோயிற் கலைகள் | பேராசிரியர் முனைவர் வ. மகேஸ்வரன்<br>தொலைபேசி: +94 779071543 |
| !5. | 14.08.2020 | இலங்கைத் தமிழர் கூத்து மரபு | முனைவர் சி. மௌனகுரு<br>தொலைபேசி: +94 773405414 |
| !6. | 17.08.2020 | இலங்கைத் தமிழர் நாட்டார் கலைகள் | முனைவர் எஸ். ஜெய்சங்கர்<br>தொலைபேசி: +94 778095587 |
| | **இலங்கைத் தமிழ் ஊடகங்கள்** | | |
| 17. | 18.08.2020 | இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகள் | பேராசிரியர் முனைவர் ம.அப்துல்லா ரமீஸ்<br>தொலைபேசி: +94 774805646 |
| !8. | 19.08.2020 | இலங்கைத் தமிழ் இலத்திரனியல் ஊடகங்கள் | முனைவர் எஸ். ரகுராம்<br>தொலைபேசி; +94 715653330 |
| !9. | 20.08.2020 | இலங்கைத் தமிழ் ஊடகங்களின் மொழிப்பயன்பாடு | முனைவர் க. இரகுபரன்<br>தொலைபேசி: +94 718218177 |
| 20. | 21.08.2020 | இலங்கைத் தமிழ்ச் சிற்றிதழ்கள் | பேராசிரியர் முனைவர் அம்மன்கிளி முருகதாஸ்<br>தொலைபேசி: +94 770698596 |

உலகத் தமிழ்ச் சங்கமும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தும் இணையவழிக் கருத்தரங்கு : சூலை 27 – ஆகத்து 21, 2020

**கருப்பொருள்: இலங்கைத் தமிழரும் தமிழும்**

# 'இலங்கைத் தமிழ் இலத்திரனியல் ஊடகங்கள்'

**கலாநிதி சி. ரகுராம்**

**சிரேஷ்ட விரிவுரையாளர்**

**ஊடகக் கற்கைகள் துறை**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

இலங்கைத் தமிழ் மக்களின் சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் செல்நெறிகளைத் தீர்மானிப்பதிலும் தமிழ் மக்களிடையே கருத்துருவாக்கங்களை உருவாக்குவதிலும் மிகுந்த செல்வாக்குச் செலுத்துவனவாக ஊடகங்கள் காணப்படுகின்றன.

முக்கியமாக, கருத்துருவாக்கத் தளத்தில் ஊடகங்கள் அன்றாடம் முன்வைக்கின்ற விடயங்கள், ஊடகங்கள் சார்ந்து நிலவக்கூடிய நம்பிக்கைத் தன்மையின் பாற்பட்டு கணிசமான பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக அமைவதையும் அறியமுடிகின்றது.

ஊடகங்களைக் கட்டுடைத்து அவற்றின் உரிமையாண்மையை, பின்புலத்தை, உண்மையான நோக்கங்களை அடையாளம் காண முடியாது இருக்கும் அல்லது அதற்குரிய ஊடக விளங்கறிவைக் கொண்டிராது இருக்கும் மக்களிடம் இந்த ஊடகப் போக்கு மிக இலகுவாக, கணிசமான பாதிப்புக்களை விளைவித்து விடக் கூடியதாக இருக்கிறது.

அதிலும் குறிப்பாக சொல்லப்போனால், இன்றைய இலங்கைத் தமிழ் ஊடகப்பரப்பில் பெரும்பாலான ஊடகங்கள் ஆளும் அரச தரப்பினராலும், ஏனைய பல ஊடகங்கள் அரசியல் சக்திகளாலும், வெளிப்படையாக அரசியல்வாதிகளாலும், பெரும் வணிகப் பின்புலம் கொண்டவர்களாலும் உரிமை பாராட்டப்படுவதாக இருக்குமிடத்து, அவை முன்வைக்கக்கூடிய செய்திகளின் அல்லது

தகவல்களின் உண்மைத்தன்மை, நடுநிலைத்தன்மை ஆகியவற்றோடு ஊடகங்களின் சமூகப் பொறுப்புடமை சார்ந்தும் பல கேள்விகள் எழவே செய்கின்றன.

இந்தச் சூழல், வெறுமனே ஒரு பொதுமதிப்பீடு சார்ந்த பார்வை எனத் தட்டிக் கழித்துவிட அல்லது கடந்து போகலாம் என இலகுவாக எடுத்துக் கொள்ளப்பட முடியாத முக்கியமான வரலாற்றுக் கட்டத்தினை இலங்கைத் தமிழர்கள் மத்தியில் உருவாக்கியிருக்கிறது.

சமூகம் சார்ந்து மக்கள் ஒரு திரளாக அல்லது கூட்டிணைந்து செயற்படக்கூடிய வாய்ப்பும் வெளிப்பாடுகளும் மிக அருகிக் காணப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில், மக்கள் தம்மை பாதிக்கக்கூடிய விடயங்களை அல்லது தாங்கள் எதிர்நோக்குகின்ற அவலங்களை ஒரு பொதுவெளியில் அக்கறையோடும் கரிசனையோடும் விவாதிக்க முடியாத காலகட்டத்தில், ஒருவகையில் தனித்தனித் தீவுகளாக பொதுமக்கள் குழுமங்கள் உருவாகியிருக்கும் ஒரு துர்ப்பாக்கிய நிலையில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதையும் அவற்றை உள்வாங்கிக் கொள்வதையும் ஊடகங்களே பெருமளவில் நிவர்த்தி செய்து வருகின்றன.

அவை செய்திப் பத்திரிகைகளாக அல்லது தொலைக்காட்சிகளாக அல்லது வானொலிகளாக ஒரு பெருந்திரள் ஊடக வழிமுறையாக மாத்திரமன்றி, சமூக ஊடகங்கள் எனும் தளத்தில் மிக அந்நியோன்யமான, நெருக்கமான, தனிப்பட்ட, பகிர்தல் என்னும் கருத்தாடற்தளத்தை அதிகம் ஊக்குவிக்கின்ற ஊடகங்கள் அறிமுகமானதன் பின்னர், கருத்துருவாக்கத்தை உருவாக்குவதில் அல்லது அபிப்பிராயங்களைக் கட்டியெழுப்புவதில் ஊடகங்கள் மிகுந்த செல்வாக்குப் பெறுவது தவிர்க்க முடியாததாயிருக்கிறது.

சக மனிதர்களிடம் அல்லது சக நண்பர்களிடம் பெற்றுக்கொள்ள முடியாத, அவர்கள் மத்தியில் பகிர்ந்துகொள்ள முடியாத பல்வேறு விடயங்கள் சமூக ஊடகப் பரப்பில் சாதாரணமாகவே அல்லது விழிப்புணர்வுகள் இன்றியே - இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், குற்ற உணர்ச்சிகள் அற்ற வகையில் பரிமாறப்படும் இன்றைய சூழலில்,

ஊடகங்கள் முன்வைக்கும், சொல்லப்போகும் செய்திகளுக்கு உரிய ஏற்புடைமை என்பதும், அவற்றை விமர்சனங்கள் இன்றி உள்வாங்கி அடுத்தவரிடமும் பகிரும் போக்கும் மிக ஆபத்தானதாக மாறியிருக்கிறது.

இவ்வாறான சூழலில், நடுநிலைமை என்பது மிகப்பெரும் அரசியலாக இருக்கின்ற நிலையில், நேர்மைத் திறனுடன், மிக அரிதான சமூகப் பொறுப்புடமைத் தளத்தில் ஊடகங்கள் எவ்விதம் தமது பணிகளை ஆற்றிவந்துள்ளன, ஆற்றிவருகின்றன, ஆற்றப்போகின்றன என்ற கேள்விகளுக்கான பதில்களை இலங்கை ஊடகப்பரப்பில் தேடுவதாக, தனியே வரலாற்று நோக்கில் மாத்திரமல்லாது சமூக வகிபங்கினூடாகவும் இலங்கையில் ஊடகங்கள் என்னும் பரப்பினை ஆராய்வதாக 'இலங்கைத் தமிழ் இலத்திரனியல் ஊடகங்கள்' என்ற கருப்பொருளினுள் பிரவேசிக்கலாம்.

பொதுவில் இலத்திரனியல் ஊடகங்கள் என்னும்போது வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியனவே பிரதானமாகக் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. ஆனாலும், இன்றைய தொடர்பாடல் வளர்ச்சியின் பேறாக, இலத்திரனியல் ஊடங்களின் குவிவுக்களமாக இணையவெளியை மையமாக வைத்துப் புதிதாக உருவாகியிருக்கும் 'இணைய அல்லது புதிய ஊடகங்கள்' எனும் தளத்தையும் இலத்திரனியல் ஊடகங்கள் என்னும் வகைப்பாட்டினுள் நாம் இணைத்து நோக்கவேண்டிய ஆய்வுத்தேவைகள் இருப்பதனால், வானொலி, தொலைக்காட்சி, இணைய ஊடகங்கள் ஆகிய மூன்று ஊடகப் பரப்புக்கள் வழியாகவும் 'இலங்கை தமிழ் இலத்திரனியல் ஊடகங்கள்' என்ற ஆய்வுக்களத்தை அவதானிக்க வேண்டியிருக்கிறது.

## <u>இலங்கையில் தமிழ் வானொலிகள்</u>

இலத்திரனியல் ஊடகங்கள் தோற்றம்பெற்ற காலக்கிரமத்தின் அடிப்படையில் வானொலியே மூத்த இலத்திரனியல் ஊடகமாகக் கொள்ளப்படுகின்றது. உலகில் மாத்திரமன்றி, இலங்கை ஊடக வரலாற்றிலும் இவ்வகையில் வானொலிக்குத் தனித்த இடமுண்டு.

அவ்வகையில், இலங்கைத் தமிழர்களிடையே வானொலி என்னும் ஊடகம் பெற்றிருக்கக் கூடிய அறிமுகத்தையும் அதன் வளர்ச்சியையும் இங்கே வரலாற்று அடிப்படையில் நோக்கலாம்.

‘இலங்கை வானொலி’ என்பது இலங்கைத் தமிழர்களிடையே மாத்திரமல்லாது தமிழகத்தில் வாழக்கூடிய தமிழ் மக்களையும் கவர்ந்திழுக்கக் கூடிய ஒரு மந்திரச் சொல்லாக பல ஆண்டுகாலம் செல்வாக்கு செலுத்தி வந்திருக்கிறது.

இவ்வாறாக, ஒரு பிரபலமான ஊடகமாக மக்களிடையே வரவேற்பு பெற்றிருந்த இலங்கை வானொலியின் தொடக்கம் இலங்கையானது காலனியாதிக்கத்தின் ஆட்சிக்குள் இருந்தபோதே இடம்பெற்றிருந்தது ஒரு சுவாரசியமான தகவலாகும்.

இந்த வகையில், 1925ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் திகதி இலங்கையின் பிரித்தானிய ஆளுனராக இருந்த கிளிபேர்ட் என்பவரால் உத்தியோகபூர்வ வானொலிச் சேவை இலங்கையில் ஆரம்பித்து வைக்கப்பட்டதாகவும், பிரிட்டிஷ் இராணுவத்தின் தகவல் தொடர்பாடல் கட்டமைப்பிற்கு உதவும் நோக்கில் அது தொடங்கப்பட்டதாகவும் வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன.

‘இலங்கை வானொலி’ அல்லது ‘ரேடியோ சிலோன்’ எனப் பிற்பொழுதில் பெயர்பெற்ற வானொலிச் சேவை ஆரம்ப நிலையில் ‘கொழும்பு ரேடியோ’ என்று அழைக்கப்பட்டது. எட்வேர்ட் ஹாப்பர் என்பவர் 1921 ஆம் ஆண்டில் கொழும்பு தந்தித் திணைக்களத்தின் தலைமைப் பொறியியலாளராக இருந்தார். அவரே ‘கொழும்பு ரேடியோ’ வின் பரீட்சார்த்த ஒலிபரப்பை முன்னெடுத்தார். இந்தப் பரீட்சார்த்த ஒலிபரப்பு 1923 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட வானொலிச்சேவை படிப்படியாக வளர்ச்சி பெற்று, 1949 இல் இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் ‘இலங்கை வானொலி’என்ற பெயரைப் பெற்று அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் செயற்படத் தொடங்கியது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எனப் பின்னாட்களில் தனித்தன்மையுடன் இயங்கிய இவ்வானொலியின் ஒலிபரப்பாளர்கள் அல்லது அறிவிப்பாளர்கள் மொழியறிவு, ஆளுமை ஆகியவற்றால் நேயர்களுக்கு மிக அறிமுகமானவர்களாக இருந்தனர்.

தென்னாசியாவின் முதல் வானொலி எனும் பெருமைக்குரிய இலங்கை வானொலியின் செய்திகள், நடப்பு விவகாரம் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகள் தமக்கெனத் தனித்துவமான அடையாளங்களைக் கொண்டிருந்தன.

இலங்கை வானொலியின் தமிழ் ஒலிபரப்புத் துறையில் மிகுந்த அனுபவம் பெற்றிருந்தவரும் சிரேஷ்ட ஒலிபரப்பாளராகச் சேவையாற்றியவருமான சோ. சிவபாதசுந்தரம் தனது அனுபவத்தின்படி கூறும் “எந்த நிகழ்ச்சியை ஒலிபரப்பினால் நேயர்களிடம் அது எத்தகைய உணர்ச்சியை, எத்தகைய அனுபவத்தை உருவாக்கும் என்பதை ஒலிபரப்பாளர் ஊகித்துக் கொள்ள வேண்டும்” என்பது இலங்கை வானொலியின் தமிழ் ஒலிபரப்புத் துறையில் ஒரு தாரக மந்திரமாக இருந்து வந்தது.

இலங்கை வானொலி ஒலிபரப்புத்துறை கொண்டிருந்த இந்தச் சீரிய பண்பு, அதனுடைய நீண்டகால வளர்ச்சிக்கு ஒரு சிறப்பான அடிப்படையை, ஆரம்பத்தைத் தருவதாக அமைந்திருந்தது.

இலங்கை வானொலியில் சேவையாற்றிய பலரும் அதனை ஒரு தொழிலாக மாத்திரம் கொள்ளாது , தமது வாழ்க்கையின் இலட்சியமாக, மக்களுக்கு விருப்புடன் ஆற்றும் ஒரு சேவையாக, ஒரு படைப்பாக்க நுட்பமாக ஒலிபரப்புத் துறையைப் பயன்படுத்தி வந்தனர் என்பது இங்கு குறிப்பிட வேண்டியதாகும்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆங்கில வழி நிகழ்ச்சிகளுக்கு அதிக முன்னுரிமை கொடுக்கப்பட்டு வந்திருந்தபோது, தமிழிலும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பிய நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகனான சோ. நடராஜன் போன்றோர் இலங்கை வானொலியின் பிதாமகர்களாக இன்றும் போற்றப்படுகின்றனர்.

வானொலி நாடகம், இசைக் கச்சேரி, உரைச்சித்திரம், சிறுவர் நிகழ்ச்சி என பல தரப்பட்ட நிகழ்ச்சிகளையும் தமிழில் மேற்கொண்டவராக, பன்முகத்திறன் திறன் படைத்தவராக சோ. நடராஜன் காணப்பட்டிருக்கின்றார்.

இவரைப் போன்றே, இலங்கை வானொலியின் தமிழ் ஒலிபரப்புத்துறையில் ஆரம்பகால முன்னோடிகளாக சோ. சிவபாதசுந்தரம், எஸ். குஞ்சிதபாதம், கே. எஸ். நடராஜா, ‘சானா’ சண்முகநாதன், எஸ். சரவணமுத்து, எஸ். புண்ணியமூர்த்தி, வி.ஏ. சிவஞானம், எஸ். பி. மயில்வாகனன் ஆகியோர் இன்றும் நினைவு கூரப்படுகின்றனர்.

இலங்கை வானொலியில் தான் பெற்ற அனுபவமே லண்டன் சென்று பி.பி. ஸி வானொலியில் 'தமிழோசை' என்னும் தமிழ் ஒலிபரப்புச் சேவையை ஆரம்பிக்க உறுதுணை புரிந்ததாக சோ. சிவபாதசுந்தரம் பின்னாட்களில் குறிப்பிட்டதை கவனத்தில் கொள்ளும்போது, இலங்கை வானொலியின் தமிழ் ஒலிபரப்பு துறை உலகளாவியாீதியில் புகழ்பெற்றிருந்த பல விருட்சங்களை உருவாக்கிய ஒரு விளைநிலமாக ஒலிபரப்புத்துறையில் இருந்து வந்ததை அவதானிக்க முடிகிறது.

இந்தவகையில், தாம் சென்ற நாடுகளிலும் தமது ஒலிபரப்பு வாண்மையினால் புகழ்பெற்ற பி.எச். அப்துல் ஹமீட், ஆனந்தி சூரியப்பிரகாசம், வீ.என். மதியழகன், இளையதம்பி தயானந்தா, விமல் சொக்கநாதன், பி.விக்னேஸ்வரன் எனப் பெயர்பெற்ற பலரும் இலங்கை வானொலியில் தமது முத்திரைகளைப் பதித்தவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

எழுத்துப் பிழையின்றி எவ்வாறு ஒலிபரப்புச் செய்ய வேண்டும் என்பதையும் எப்படிச் சொற்களை உச்சரிக்க வேண்டும் என்பதையும் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்பாளர்கள் தமிழ் கூறும் நல்லுலகிற்கு மிக இலாவகமாகத் தந்துசென்றனர் என்பதை மறுக்க முடியாது.

தமிழை அட்சரசுத்தமாக உச்சரிக்கவேண்டும் என்பதை ஒலிபரப்புத்துறையின் தாரகமந்திரமாக கொண்ட ஒலிபரப்பாளர் பரம்பரை இலங்கை வானொலியிலில் பன்னெடுங்காலம் கோலோச்சி வந்தமையானது, சாதாரண மக்கள் மத்தியிலும் மொழியாற்றல் வலுப்பெற ஊடகங்கள் உதவுமாற்றலுக்கு ஒரு முன்னுதாரணமான செயற்பாடாகவும் அமைந்திருந்தது.

இலங்கை வானொலியின் தமிழ் ஒலிபரப்புத்துறை தனியே பொழுதுபோக்கிற்கு மாத்திரமல்லாது, இலைமறை காயாக இருந்த உள்ளூர்க் கலைஞர்களின் படைப்பாற்றலை இனங்காணும், ஊக்குவிக்கும் களமாகவும் காணப்பட்டது.

சினிமாப் பாடல்களில் மாத்திரம் தங்கியிருக்காது, உள்ளூர்க் கலைஞர்களுக்கும் இடமளித்து அவர்களது படைப்புகளுக்கும் உரிய கௌரவத்தை இலங்கை வானொலி அளித்தது என்றால் மிகையில்லை என்றே கூறலாம். அதனோடு, தமிழ்க் கிராமங்களில் இருந்து எழுந்து வந்த நாட்டார் படைப்புகளுக்கும் கௌரவத்தையும் இயலுமான இடத்தையும் தந்ததாக இலங்கை வானொலியின் தமிழ் ஒலிபரப்புக் களம் காணப்பட்டது. இன்றைக்கும் காலம் மறைத்துச் சென்ற தமிழ் நாட்டார் பாடல்களைத் தேடும்

ஆய்வாளர்களுக்கு இலங்கை வானொலியின் ஒலிப்பதிவுக் களஞ்சியங்கள், அவற்றில் குறிப்பிடத்தக்கவை மறைந்துபோனாலும் பெரும் வாய்ப்பானதாக அமைவதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

தமிழில் பாடல்களுக்கு மாத்திரமல்லாது, வானொலி நாடகங்கள் நேயர்கள் மத்தியில் மிகப்பிரபலம் பெறுவதற்கும் இலங்கை வானொலியின் தமிழ் ஒலிபரப்புதுறை சிறப்பிடத்தைத் தந்தது.

நாடகம் இடம்பெறும் களங்களையும் கதாபாத்திரங்களையும் செவிவழியாக கிடைக்கும் ஒலிக்குறிப்புக்களின் வழியாக அந்தத் தளத்திற்கே அழைத்துச் சென்றதிலும், வானொலி நாடகங்கள் ஒலிபரப்பாகும் நேரங்களிலெல்லாம் தமது அன்றாட, அவசியப் பணிகளைக் கூட ஒதுக்கிவைத்து நேயர்கள் வானொலிகளுக்கு அருகில் காத்துக்கிடந்தமையும் இலங்கை வானொலி நேயர்கள் இலகுவில் மறக்கக்கூடிய விடயமல்ல.

வானொலி நாடகங்களில் உலாவந்த கதாபாத்திரங்களும், கதை நடைபெற்ற களங்களும் இலங்கையின் தமிழ்க் கிராமப்புற வாழ்வை கண்முன்கொண்டுவரும் காட்சிப்படுத்தலை அற்புதமாகச் செய்துவந்தன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையின் நாடகத் தயாரிப்பாளராகப் பணியாற்றிய ‘சானா’ எனப் பிரபலமடைந்திருந்த சண்முகநாதன், கே.எம். வாசகர், பி. விக்னேஸ்வரன், ஜோர்ஜ் சந்திரசேகரன், நடராஜசிவம், கே.எஸ். பாலச்சந்திரன் ஆகியோர் வானொலி நாடகத் தயாரிப்புக்களுக்கு முன்னோடிகளாக இருந்தனர்.

வானொலி நாடகங்கள் பெற்றிருந்த அபிமானத்தின் பேரில், அவ்வாறான வானொலி நாடக நிகழ்ச்சிகளுக்கு அனுசரணை வழங்கி, தமது பொருட்களையும் சேவைகளையும் விளம்பரப்படுத்துவதற்கு இலங்கையின் பிரபல உற்பத்தி நிறுவனங்கள், வங்கிகள் முதற்கொண்டு பல விளம்பரதாரர்களும் முண்டியடித்து நின்றமைமையும் ஒரு வரலாறே.

இந்தவகையில், சில்லையூர் செல்வராஜனின் திரைப்படப் பிரதியை மூலமாகக் கொண்டு, கே.எம். வாசகர் எழுதித் தயாரித்திருந்து, மக்கள் வங்கியின் அனுசரணையுடன் வர்த்தக சேவையில் ஒலிபரப்பாகிய ‘தணியாத தாகம்’, இலங்கை வானொலி நாடகத்துறையின் உச்சக்கட்டம் என்கிறார் பி. விக்னேஸ்வரன். ‘‘யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் அமைந்த சமூக வானொலி நாடகம் ஒன்று பிராந்திய வேறுபாடுகளைக் கடந்து அபரிதமான வரவேற்பைப் பெற்றது வரலாற்று நிகழ்ச்சி’’ என்கிறார் அவர்.

இலங்கை வானொலி தனது நேயர்களிடம் அபிமானத்தைச் சம்பாதித்து வைத்திருந்தது மாத்திரமல்லாது, வானொலி வழியான தொடர்பாடல் அவர்கள் மத்தியில் உறவுமுறை நெருக்கத்தையும் பேணும் வாய்ப்புக்களைத் தந்திருந்தமை உலகின் வேறு வானொலிச் சேவைகளில் இலகுவில் காணக்கிடைக்காத அம்சமாகும்.

இலங்கை வானொலியில் தமிழ் ஒலிபரப்பாளர்கள் மக்களிடையே பெற்றிருந்த நெருக்கத்திற்கு அவர்களில் பலர் ‘வானொலி அக்கா’வாக, ‘வானொலி மாமா’வாக பிரபலமடைந்தது இலங்கை வானொலி தமிழ் மக்களிடையே பெற்றிருந்த இத்தகைய நெருக்கத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

இலங்கை வானொலியின் தமிழ் ஒலிபரப்புத் துறை - வணிக ரீதியாகவும் ஆதாயங்களை ஈட்டமுடியும் என்பதைத் தனது வர்த்தக ஒலிபரப்பு மூலம் எடுத்துக்காட்டியிருக்கிறது. இலங்கை வானொலியின் தமிழ் வர்த்தக ஒலிபரப்பு - புதிய வடிவிலான பல நிகழ்ச்சிகளுக்கும் களம் சமைத்து கொடுத்திருந்தது. தென்னிந்திய சினிமாப் பாடல்களுக்கு மாத்திரமல்லாது, இலங்கையின் பொப்பிசைப் பாடல்கள், நாட்டார் பாடல்கள் போன்றவற்றையும் வர்த்தக ரீதியில் பயன்படுத்திக் கொள்வதற்கும் இலங்கை வானொலி புதிய வழியைக் காட்டியிருந்தது.

திரையிசைப் பாடல்களை புதிய புதிய வடிவங்களில் ஒளிபரப்புக் களத்திற்கு அறிமுகப்படுத்திய பெருமையும் இலங்கை வானொலிக்கு உண்டு. ‘பொங்கும் பூம்புனல்’, ‘நேயர் விருப்பம்’, ‘இன்றைய நேயர்’, ‘விடுமுறை விருப்பம்’, ‘பிறந்தநாள் வாழ்த்து’, ‘ஜோடி மாற்றம்’, ‘இரு குரலிசை’, ‘ஒரு படப் பாட்டு’ எனப் பல வடிவங்கள் திரையிசைப்பாடல்களுக்கு வழங்கப்பட்டன. திரையிசைப் பாடல்களுக்கு ஒருவகையில் புதிய ஜனரஞ்சகத் தன்மையை வழங்கியவர்களாக இலங்கை வானொலியின் தமிழ் ஒலிபரப்பாளர்கள் காணப்பட்டனர்.

1980களின் ஆரம்ப காலப் பகுதியில் இலங்கை ஒலிபரப்புத் துறை மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்குப் பயன்பட வேண்டும் என்ற பிரக்ஞை ஏற்பட்டு ஒலிபரப்பு, கிராமங்களுக்கும், மக்கள் வாழும் இடங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டது.

மக்கள் சேவை ஒலிபரப்புத் தத்துவங்களுக்கு ஏற்ப தனித்தனித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக விளையாட்டு, சமயம், கல்வி மற்றும் விவசாயம் ஆகிய துறைகளுக்குத் தனித்தனி ஒலிபரப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

1990ஆம் ஆண்டுகளைத் தொடர்ந்து இலங்கையில் அரச ஒலிபரப்பு மெதுவாக அதன் மக்கள் சேவை நிலைப்பாட்டிலிருந்தும் ஜனரஞ்சகத் தன்மையிலிருந்தும் தன்னை விடுவிக்கத் தொடங்கியது என்றே அவதானிகள் கருதுகின்றனர். என்றாலும், தனியார் ஒலிபரப்புக்கு வழங்கப்பட்ட அனுமதிகளின் வழியாக இலங்கையின் வானொலி வீச்சுப்பரப்பும் அகலத் தொடங்கியதையும் மறுத்துவிட முடியாது.

இலங்கையில் தனியார் தமிழ் வானொலிகளின் முகிழ்நிலைப் பணிப்பாளர்களாகவும், வழிநடத்துபவர்களாகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றியவர்களே அதிகளவில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இந்தவகையில், இலங்கையின் முதலாவது தனியார் தமிழ்ப் பண்பலை வானொலியான 'எவ்.எம். 99' 1993ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும்போது அதன் பணிப்பாளராக தில்லைநாதனும், பின் 'சுவர்ண ஒலி' எனும் பெயருடன் அவ்வானொலி செயற்படத் தொடங்கிய போது அதன் பணிப்பாளராக இலங்கை வானொலியின் தமிழ்ச்சேவை பணிப்பாளராக இருந்த ஏ. திருஞானசுந்தரமும், 'சக்தி எவ்.எம்' 1998ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படுகின்றபோது அதன் முதற் பணிப்பாளராக எஸ். எழில்வேந்தனும், 'சூரியன் எவ்.எம்' 1998ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படுகின்றபோது அதன் முதற் பணிப்பாளராக அறிவிப்பாளர் சி.நடராஜசிவமும் பணியாற்றினர்.

ஆனாலும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வகுத்துவந்த பாதையிலிருந்து ஆரம்பம் முதலே தனியார் தமிழ் பண்பலை வானொலிச் சேவைகள் தமக்கான நிகழ்ச்சி வடிவமைப்பு, நிகழ்ச்சி முன்வைப்பு, மொழிப் பிரயோகம் ஆகியவற்றில் வேறுபாடான போக்கினைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தமையையும் அவதானத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது.

தனியார் தமிழ்ப் பண்பலை வானொலிகள் பெரும்பாலும் வர்த்தக நிறுவனங்களின் உடைமைகளாகவே காணப்பட்டதாலும், அரசியல் அதிகாரம் மற்றும் வணிக நோக்கங்கள் அவற்றின் மூலோபாயங்களாக அமைந்திருந்ததாலும், நேயர்களை பிரசித்த இரசனைக்கு ஆளாக்குவதன் மூலம் அவர்களை இலகுவாகக் கையாளலாம் என்பதாலும் அந்த நோக்கங்களே அவற்றின் செல்நெறியைத் தீர்மானிப்பவையாகவும் அமைந்திருக்கலாம்.

ஒப்பீட்டுரீதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை விட தமிழ்ப் பண்பலை வானொலிகளுக்கு உரிமையாளர்களால் அளிக்கப்பட்ட படைப்பாக்கச் சுதந்திரம் உள்ளடக்கப் பல்வகைமை கொண்ட நிகழ்ச்சிகளை அதிகம் தருவதற்கு வாய்ப்புக்களைத் தந்திருந்தாலும், தனியார் பண்பலை வானொலி நிகழ்ச்சிகளின் பிரதான உள்ளடக்கம் திரையிசைப் பாடல்களாகவே அமைந்திருந்ததும், இன்றும் அமைந்திருப்பதும் கவனிக்கத்தக்கது. பால், வயது, இனம், தொழில், கல்வி, பொருளாதாரம், சமூக மதிப்பு என மக்கள் வேறுபட்டிருந்தாலும் அவற்றையெல்லாம் கடந்து சகலருக்கும் பொதுவான நிகழ்ச்சிகளை வழங்குவனவாக (Homogeneous Contents to Heterogeneous Audiences) பண்பலை வானொலிகள் இயங்குகின்றன.

இந்த வானொலிச் சேவைகள் யாவற்றுக்கும் அப்பால், தமிழர் உரிமைப் போராட்டம் நிகழ்ந்த மண்ணிலிருந்து போராளிகளினால் இயக்கப்பட்ட வானொலிச் சேவைகளையும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். போராட்டம் இடம்பெற்ற காலப்பகுதியில், மிக அர்ப்பணிப்புடனும் தொலைநோக்குடனும் இயங்கி, மக்களை வழிநடாத்தப் போராளிகள் மேற்கொண்ட ஊடகப்பணிகளில் வானொலிச் சேவையும் ஒன்றாகும்.

போர் மக்களை ஆக்கிரமித்தபோதெல்லாம், மக்கள் இடம்பெயர்ந்து சென்றபோது இந்த வானொலிச் சேவைகளும் மக்களோடு மக்களாக இடம்பெயர்ந்து, கிடைத்த இடங்களில், மிகக் குறைந்த வசதிகளுடன் இயங்கிய இந்த வானொலிச் சேவைகள் போர்க்கால ஊடகப்பணிகளுக்கு ஒரு முத்தாய்ப்பு என்றே கூறலாம்.

இந்தவகையில், 1990ஆம் ஆண்டு 'புலிகளின் குரல்' வானொலிச் சேவை ஆரம்பமானது. ஆரம்பத்தில் இதன் சேவை இரவு எட்டு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணிவரையே இடம்பெற்றது. பின் படிப்படியாக நேரம் அதிகரிக்கப் பெற்றதுடன் காலைச் சேவையும் இடம்பெறத் தொடங்கியது.

அடிக்கடி விமானத் தாக்குதலுக்கும், எறிகணை வீச்சுக்கும் உள்ளாகும் ஒலிபரப்புக் கோபுரத்திலிருந்து தவறாது ஒலிபரப்புச் செய்ய வேண்டும், ஒலிப்பதிவுகள் செய்வது ஓரிடம், ஒலிபரப்புச் செய்வது இன்னோர் இடம் என்ற பேரிடர்கள் மத்தியில் ஊடகவியலாளர்களின் அர்ப்பணிப்புடன் இயங்கிய இந்த வானொலிச் சேவை 2009 இறுதி யுத்தகாலம் வரை இயங்கி, அதனுடன் மௌனித்துப் போனது.

இந்த வானொலிச் சேவை, செய்திகளுக்கும் மக்கள் அறிவித்தலுக்குமான போராளிகளின் உத்தியோகபூர்வமான சேவையாக இடம்பெற்றபோது, இந்த வானொலியோடு இணைந்ததாக

வர்த்தகரீதியான வானொலிச் சேவையொன்றும் 'தமிழீழ வானொலி' என்னும் பெயரில் போராளிகளால் மேற்கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் தமிழ்த் தொலைக்காட்சிகள்

இலங்கையில் தொலைக்காட்சி ஊடகச் சேவை என்பது, 1979ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி ஆரம்பமான சுயாதீன தொலைக்காட்சிச் சேவையுடன் கால்கோளிடப்படுகின்றது. உண்மையில் இலத்திரனியல் ஊடகங்கள் சார்ந்த மிகக் குறிப்பிடத்தக்க அறிமுகம் என இதனைக் கருதிக் கொண்டாலும், அரசியல் சார்ந்த சர்வதேச வணிக முயற்சியின் பேறாகவே இந்த ஆரம்பம் அமைவதை ஊடகச் சிந்தனையாளர்கள் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை.

இலங்கையின் முன்னாள் பிரதமரான ரணில் விக்ரமசிங்கவின் சகோதரரும் ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்த்தனவின் நெருங்கிய மருமகன் முறை உறவினருமான வர்த்தகர் ஷான் விக்ரமசிங்க, அனில் விஜயவர்த்தன மற்றும் பொப் கிறிஸ்ரி ஆகியோரின் கூட்டுமுயற்சியால் இலங்கையில் முதலாவது முறைசார்ந்த தொலைக்காட்சி ஒளிபரப்பாக சுயாதீன தொலைக்காட்சிச் சேவை தோற்றம் பெற்றது.

தொடக்கத்தில் உரிமையாண்மையின் அடிப்படையில், இது தனியார் தொலைக்காட்சிச் சேவையாக அமைந்திருந்தாலும், இரண்டு மாதங்கள் என்னும் மிகக் குறுகிய காலத்திலேயே இது அன்றைய அரசினால் பொறுப்பேற்கப்பட்டு, அரச தொலைக்காட்சிச் சேவையாக மாற்றம் கண்டது. அன்றைய அரசாங்கம் வெளியிட்ட ஜூன் 1979ஆம் ஆண்டின் 39/4ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சுயாதீன தொலைக்காட்சிச் சேவை தேசியமயமாக்கப்பட்டது. அதன் பெயர் கொண்டிருக்கும் சுயாதீனம் என்பது, அதன் பெயரளவிலேயே இன்றுவரை நிலைபெற்றிருக்கிறது.

சுயாதீன தொலைக்காட்சிச் சேவையோடு ஒப்பிடுகையில், முழுமையாக அரசின் சட்டபூர்வமான தொலைக்காட்சி என்ற அங்கீகாரம் பெற்ற தொலைக்காட்சிச் சேவையாக ரூபவாஹினியைக் குறிப்பிடலாம். 1982ஆம் ஆண்டில் ஜப்பானிய அரசின் மிகப்பெரும் உட்கட்டமைப்பு உதவிகளுடன் ஆரம்பமான இத்தொலைக்காட்சிச் சேவை இலங்கையர்களுக்கு அறிவு மற்றும் கல்விசார் நிகழ்ச்சிகளை வழங்கவென முன்னெடுக்கப்பட்டது.

உலகின் வளரும் நாடுகளில் மிகக் கரிசனையாக இருப்பதாகக் காட்டிக்கொள்ளும் வளர்ந்த நாடுகளைப் போலவே இலங்கையின் இலத்திரனியல் ஊடகத்துறையிலும் உட்கட்டமைப்பு வசதிகளையும் பயிற்சிகளையும் ஜப்பான் தந்துவியதற்குப் பின்னணியில் இலங்கையின் அன்றைய புதிய அரசாங்கம் முன்வைத்த திறந்த பொருளாதாரக் கொள்கையும், ஜப்பான் தெற்காசிய நாடுகளை நோக்கி தனது இலத்திரனியல் பொருட்களுக்கான சந்தையை விரிவாக்கியிருந்ததையும் ஒருசேரக் கவனத்திற் கொள்ளமுடியும்.

அதிலும், இலங்கையில் தொலைக்காட்சிச் சேவையின் ஆரம்பத்திலேயே கறுப்பு – வெள்ளை தொலைக்காட்சி ஒளிபரப்பிற்கு மாற்றாக, வர்ணத் தொலைக்காட்சிச் சேவையே நேரடியாக அறிமுகமாயிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசாங்கத்தின் தேசிய தொலைக்காட்சியாக ரூபவாஹினி அமைந்திருந்தாலும் அங்கு தமிழ்மொழிக்கான இடம் பற்றி சிலாகித்துக் கூறுமளவிற்கு குறிப்பிடத்தகுந்த முன்னேற்றகரமான அம்சங்கள் எவையும் ஆரம்பத்திலிருந்து இடம்பெற்றிருக்கவில்லை.

தமிழ்மொழியில் ஒளிபரப்பப்படக்கூடிய நிகழ்ச்சிகளுக்கான தனியான கரிசனையும் தளமும் அங்கு மிகப்பெரும் அளவிற்கு ஒருபோதும் இருந்ததில்லை என்றே இலங்கையின் தொலைக்காட்சித் துறையில் பணியாற்றிய சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர்கள் பலரும் கருத்துக் கொண்டுள்ளனர்.

ரூபவாஹினி தொலைக்காட்சிச் சேவைக்கெனப் பணிக்கு அமர்த்தப்பட்ட ஆரம்பகாலத் தயாரிப்பாளர்கள் பலரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்தே நியமிக்கப்பட்டவர்களாகப் பெருமளவிற்குக் காணப்பட்டனர். தமிழ் நிகழ்ச்சிகளுக்கு என்பதாக இல்லாது, செய்திகளை சிங்கள, ஆங்கில மொழிகளுக்குச் சமாந்தரமாகத் தயாரிப்பதே அன்றைய பிரதான நோக்கமாகக் காணப்பட்டது. ‘தமிழ் நிகழ்ச்சிப் பிரிவு’ என்ற தனியான நிகழ்ச்சித் தயாரிப்பு பிரிவிற்கான தேவை என்பது ஆரம்பத்தில் உணரப்பட்டிருக்கவில்லை. இதனால், சிங்கள நிகழ்ச்சித் தயாரிப்புக்களோடு ஒப்பிடுகையில் தமிழ் நிகழ்ச்சிகள் இலங்கையின் தொலைக்காட்சிச் சேவையில் காலம் பிந்திய முயற்சிகளாகவே அமைந்திருந்தமை, தமிழில் நிகழ்ச்சிகளுக்கான படைப்பாக்க வெளியை மட்டுப்படுத்தியிருந்ததாகவே கொள்ளலாம்.

தமிழில் இடம்பெறும் செய்தியறிக்கைகளை விடுத்து, 1982ம் ஆண்டளவில் ஆக மூன்று நிகழ்ச்சிகளே ரூபவாஹினியில் தமிழில் ஒளிபரப்பாகும் சந்தர்ப்பத்தைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருக்கிறது. வாராந்தம் ஒளிபரப்பான ‘கலையரங்கம்’, மாதாந்தம் ஒளிபரப்பான ‘சைவ நீதி’ மற்றும் ‘வளர்பிறை’ சமயம்சார்ந்த ஆகிய நிகழ்ச்சிகளே அவையாகும்.

1983ஆம் ஆண்டில், ‘காதம்பரி’ என்ற கதம்ப அல்லது சஞ்சிகை நிகழ்ச்சியும், ‘வாத்திய விருந்து’ என்ற இசை நிகழ்ச்சியோடு, வாரம் ஒருமுறை புதன்கிழமைகளில் ஒரு தமிழ்த் திரைப்படமும் ஒளிபரப்பாகிவந்தது. அதே ஆண்டு இடம்பெற்ற இலங்கை வரலாற்றின் கோரப்பதிவான இனக்கலவரத்தின் பேறாக, ரூபவாஹினியின் தமிழ்ப் பணியாளர்கள் பெரும்பாலானோர் தலைநகர்

கொழும்பிலிருந்து இடம்பெயர்ந்து தமிழர் பெரும்பான்மையாக வாழ்ந்த வட–கிழக்குப் பகுதிகளுக்கும், புலம்பெயர்ந்து இந்தியா உட்பட வேறு நாடுகளுக்கும் சென்றதால் இந்த வாய்ப்புக்களும் பின்னாட்களில் அருகிப்போயிற்று.

கொழும்பில் பிரதான ரூபவாஹினியின் பிரதான கலையகங்களில் தமிழில் நிகழ்ச்சிகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்களும், அனுசரணையும் அரிதாகிப் போனாலும், தமிழ் மக்கள் வாழுமிடங்களுக்குச் சென்றே நிகழ்ச்சிகளைத் தயாரிக்கவேண்டிய நிலை தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பளர்களுக்கு உருவானது.

கிடைத்த சந்தர்ப்பங்களை முறையாகப் பயன்படுத்திய தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்பளர்கள் தம்மாலியன்ற புதுமைகளையும் படைக்கத் தவறாமலிருந்தமையும் ஒருவகையில் பாராட்டத்தக்கதாகும். இதற்கு, 1989களில் உருவான – 'சங்கமம்', 'வண்ணச்சோலை', 'ஊர்க்கோலம்', 'ஒளித்தென்றல்', 'ஊரும் உலகமும்', 'கதைப்பூங்கா', 'ராகபாவம்', 'சிறுவர் களஞ்சியம்', 2000ஆம் ஆண்டளவில் ஆரம்பமான 'தீம்தனனா', 'உங்கள் விருப்பம்', 'விடுமுறை விருந்து', 'நிலாச்சோலை', 'எல்லாம் சங்கீதம்'ஆகிய நிகழ்ச்சிகள் சில உதாரணங்களாகும்.

தமிழில் தொலைக்காட்சிவழி சிறுவர் நிகழ்ச்சிகளுக்கான கால்கோளாக இருந்த 1984இல் ஆரம்பிக்கப்பட்ட 'மலரும் அரும்புகள்' , நேர்காணல் நிகழ்ச்சியான 'தரிசனம்', வார நாட்களில் தினமும் ஒளிபரப்பான காலை நிகழ்ச்சியான 'உதய தரிசனம்'ஆகியனவும் குறிப்பிடத்தக்க முயற்சிகளாகும்.

ரூபவாஹினியைப் பொறுத்தவரையில் தெற்காசியாவில் தொலைக்காட்சித் தொடர் நாடகங்களுக்கு தனித்துவத்தைத் தந்திருந்த தொலைக்காட்சி அலைவரிசையாக கருதப்படுகின்றது. தெற்காசியாவில் வர்ணத்தில் ஒளிபரப்பான முதல் தொலைக்காட்சித் தொடர் நாடகமெனவும் இலங்கையின் முதலாவது தொலைக்காட்சித் தொடர் நாடகமெனவும் பெயர்பெற்ற 'திமித்து முது' 1982ஆம் ஆண்டில் ஒளிபரப்பானது முதற்கொண்டு சிங்கள மொழியில் தொடர் நாடகங்களுக்கான வரவேற்பு மிகப்பெருமளவில் ரூபவாஹினிக்குக் கிடைக்கப் பெற்றிருந்தது.

இந்தவகையில் தமிழ்மொழி வழியேயும் குறிப்பிடத்தக்க அளவில் தொலைக்காட்சி நாடகங்களுக்கான முயற்சிகள் ரூபவாஹினியில் பணியாற்றிய சிரேஷ்ட தமிழ் ஒளிபரப்பாளர்களால் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போலவே, ரூபவாஹினியிலும் தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் தொலைகாட்சி நாடகத் தயாரிப்புக்களிலும் முனைப்புக் காட்டியிருந்தமையும் இங்கு குறிப்பிடத் தவறமுடியாத விடயமாகும். பி.விக்னேஸ்வரன், அருணா செல்லத்துரை, ஆர். ரவீந்திரன் ஆகியோர் தமது தொலைக்காட்சி நாடக முயற்சிகளுக்காகப் பாராட்டுக்குரியவர்களாக அமைந்திருந்தனர்.

குறிப்பாக, பி.விக்னேஸ்வரன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தனது பணிக்காலத்தில் பெற்றிருந்த அனுபவங்களுடன் ரூபவாஹினியில் சேவையாற்றிய காலத்தில் தமிழில் நாடகத் தயாரிப்புக்களுக்கு முக்கிய முன்முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

இந்தவகையில் சிங்களமொழித் தயாரிப்பாளர்களுக்கே ஓர் முன்னோடியாக அவர் ரூபவாஹினியில் தயாரித்தளித்த 'கண்ணாடி வார்ப்புக்கள்' தொலைக்காட்சி நாடகம் அன்று பிரபலம்பெற்றிருந்தது. டெனஸி வில்லியம்ஸ் என்னும் ஆங்கில நாடக ஆசிரியர் எழுதிய 'Glass Menageries' என்னும் நாடகத்தை கே.பாலேந்திரா தமிழில் மேடை நாடகமாக அளித்திருந்தார். இந்த நாடகத்தை ரூபவாஹினி தனது ஒளிபரப்பை ஆரம்பித்த இரு வாரங்களுக்குள் தொலைக்காட்சி நாடகமாக பி. விக்னேஸ்வரன் தயாரித்தளித்துப் பாராட்டப்பெற்றிருந்தார்.

தொடர்ந்து ரூபவாஹினியில் வெளிப்புறப் படப்பிடிப்பில் முதன்முதலாகத் தயாரிக்கப்பட்ட தமிழ்த் தொலைக்காட்சி நாடகமான 'கற்பனைகள் கலையவில்லை', சிறந்த குறுநாடகத்திற்கான 'விஜய ரூபவாஹினி' விருதுபெற்ற 'நிஜங்களின் தரிசனம்', முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் வெளிப்புறப் படப்பிடிப்பில் தயாரிக்கப்பட்ட 'உதயத்தில் அஸ்தமனம்' ஆகிய தொலைக்காட்சி நாடகங்களும் பி. விக்னேஸ்வரனால் தயாரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னாட்களிலும், குறிப்பிடத்தக்க சில முயற்சிகள் தமிழ் தயாரிப்பாளர்களால் முன்னெடுக்கப்பட்டாலும், தமிழ் நிகழ்சிப் பிரிவு என்பது தனியாக இயங்க ஆரம்பித்திருந்தாலும் – ரூபவாஹினி நிர்வாகத்தின் கருத்து நிலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களேற்படாததும், அரசாங்கத்தின் கொள்கை வகுப்புக்களில் இனரீதியான பாரபட்சம் தொடர்ந்ததும், அரசாங்கத் தொலைக்காட்சிச் சேவையை தமிழ்மக்கள் தங்களுக்குரிய சேவையாகக் கருதமுடியாத நிலையையே உருவாக்கியிருந்தது கண்கூடு.

பிற்காலங்களில் ரூபவாஹினி நிர்வாகத்தின் கீழ் – 'ஐ' மற்றும் 'நேத்ரா' அலைவரிசைகள் தமிழ் மொழிக்கு அதிகம் இடந்தருவதாகக் கூறப்பட்டு ஆரம்பிக்கப்பட்டு இருந்தாலும், அவற்றிலும் உற்சாகம் ஊட்டக்கூடிய வகையில் தமிழ் மொழி வழியிலான நிகழ்ச்சிகளுக்கு உரிய இடம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

தமிழ்மொழி நிகழ்ச்சிகளுக்கு என இவை பொது அரங்கிற்குக் கூறப்பட்டிருந்தாலும், ரூபவாஹினியின் பிரதான அலைவரிசை நிகழ்ச்சி

நெருக்கடிகளால் ஒளிபரப்ப முடியாத நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கும், ஒருவகையில் பிரதான அலைவரிசைகளுக்கு உதவி யாக ஒத்திசைந்து ஒளிபரப்புப் பணியை முன்னெடுக்கவும் 'ஐ' மற்றும் 'நேத்ரா' அலைவரிசைகள் பயன்படுத்தப்பட்டமை அரச தமிழ் இலத்திரனியல் ஊடகங்களுக்கு நேர்ந்த மிக முக்கியமான பின்னடைவாகக் கவனத்திற் கொள்ளலாம்.

'ஐ' அலைவரிசையானது ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் இரண்டாவது அலைவரிசையாக 2000ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டபோது, அது தமிழ் நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை தருமென ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது. 'ஐ' என்பதன் ஆங்கில வடிவமான 'EYE' என்பது – கல்வி, இளைஞர்கள், பொழுதுபோக்கு (Education, Youth, Entertainment) ஆகியவற்றைக் குறிப்பதாக அமைந்திருந்தது.

தமிழ் நிகழ்ச்சிகளுக்கு மாத்திரமன்றி, 'ஐ' அலைவரிசை விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கும் என ஒதுக்கப்பட்டிருந்ததால், எப்போதெல்லாம் விளையாட்டு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படும் தேவைகள் எழுகின்றதோ, அப்போதெல்லாம் வழக்கமாக ஒளிபரப்பப்படும் தமிழ் நிகழ்ச்சிகள் இடைநிறுத்தப்பட்டு, அந்த விளையாட்டு நிகழ்ச்சிகளே முன்னுரிமை அளிக்கப்பட்டு ஒளிபரப்பாகும் வழக்கம் இன்றுவரை நீடித்தேவருகின்றது. அதிலும், நாளின் முழு நேரத்தையும் கைவசமாக்கிக்கொள்ளும் துடுப்பாட்டம் போன்ற நேரலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்போது தமிழ் நிகழ்ச்சிகள் எதுவித முன்னறிவித்தலுமின்றி ஒளிபரப்புப் பட்டியலிலிருந்து ஒதுக்கப்படும் நிலை மேலும் பரிதாபத்திற்குரியது.

தமிழில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதில் மாத்திரமின்றி, தமிழில் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதிலும் பல தடைகள் காணப்படவே செய்கின்றன. தயாரிப்புச் செலவு கருதி, தென்னிந்தியத் தமிழ்த் தொலைக்காட்சி அலைவரிசைகளோடு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் ஒளிபரப்பாகும் தொடர் நாடகங்கள், நிகழ்ச்சிகள் என்பன இந்த அலைவரிசைகளிலும் ஒளிபரப்பாக வழிவகை செய்யப்பட்டிருப்பது, தமிழில் நிகழ்ச்சிகளை உள்நாட்டிலேயே தயாரிக்கும் சந்தர்ப்பங்களை மிக இழிவளவாக்கும் நிலைக்கே கொண்டுசென்றிருக்கின்றது. அதிலும், சமீபத்தில் அதிகரித்துள்ள மொழிமாற்றத் தொடர் நாடகங்கள், நிகழ்ச்சிகள் என்பன தென்னிந்திய, வட இந்திய தொலைக்காட்சி அலைவரிசைகளிலிருந்தும், தென்கொரியா போன்ற நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் போக்கும் நிலைமையை இன்னமும் இடருக்குள்ளாக்கியுள்ளது.

‘ஐ’ அலைவரிசையில் தமிழ் நிகழ்ச்சிகள் இவ்வாறான நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருந்த நிலையில், 2008ஆம் ஆண்டு, தமிழில் நிகழ்ச்சிகளுக்காக ‘நேத்ரா’ என்ற பெயரில் தனி அலைவரிசை ஆரம்பிக்கப்படுவதக அறிவிப்பு விடுக்கப்பட்டதாயினும், அது தனியொரு அலைவரிசையாக இல்லாது, ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்த ‘ஐ’ அலைவரிசையில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும்போது ‘நேத்ரா’ என்ற தலைப்பு மாத்திரம் அந்த அலைவரிசைக்கு இணைக்கப்பட்ட வெற்று நடவடிக்கையாகவே அது அமைந்தது.

மறுபுறம், இலங்கையின் முதலாவது தொலைக்காட்சிச் சேவை எனக் குறிப்பிடப்படும் சுயாதீன தொலைக்காட்சிச் சேவையின் ஒரு பகுதியாக, ‘வசந்தம்’ என்ற பெயரில் தமிழில் நிகழ்ச்சிகளுக்கென தனியான தொலைக்காட்சி அலைவரிசையொன்று 2009ஆம் ஆண்டில் ஜூன் 25ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இது, ஆரம்பத்தில் மேற்கு மாகாணத்தில் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கான தொலைக்காட்சிச் சேவையாக ஆரம்பிக்கப்பட்டாலும், பின்னர் வடக்கு – கிழக்கு மற்றும் தமிழ்பேசும் மக்கள் வாழும் அனைத்துப் பகுதிகளுக்குமான சேவையாக விஸ்தரிக்கப்பட்டது என அதன் உத்தியோகபூர்வ அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஒப்பீட்டளவில், அரச தொலைக்காட்சியான ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு வழங்கப்படும் இடத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ‘வசந்தம்’ ஓரளவுக்கேனும் நியாயமாகத் தமிழில் நிகழ்ச்சிகளுக்கு இடமளிப்பதாக அமைந்தாலும், இங்கும் தென்னிந்தியத் தமிழ்த் தொலைக்காட்சி அலைவரிசைகளோடு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் ஒளிபரப்பாகும் தொடர் நாடகங்கள், நிகழ்ச்சிகள் என்பன இந்த அலைவரிசையிலும் ஒளிபரப்பாகும் வழிவகை செய்யப்பட்டிருப்பது – உள்ளூர் படைப்பாக்கங்களுக்கான வாய்ப்புக்களை மிக அருகிய நிலையிலேயே கொண்டிருக்கும் துரதிர்ஷ்டத்தை ‘வசந்தம்’ தொலைக்காட்சிக்கும் வழங்கியிருக்கிறது.

அதேவேளை, சுயாதீன தொலைக்காட்சிச் சேவை, ரூபவாஹினி ஆகியவற்றுக்கு வெளியே தனியார் தொலைக்காட்சிச் சேவைகளும் காலக்கிரமத்தில் ஆரம்பிக்கப்பட்டன. எம். ரிவி, ரி.என்.எல். சுவர்ணவாஹினி, டயானா விஷன், ஈ. ரிவி, ஆர்ட் ரிவி, தெரண, மக்ஸ் ரிவி, ரிவி லங்கா, த டிஸ்ட் ரிவி, லங்கா ரிவி, சியத்த, டான், பிறைம், வெற்றி, சி.எஸ்.என், உதயம் ரிவி, டிடி ரிவி, கப்பிற்றல் ரிவி, தமிழ் ஸ்ரார் ஆகியன அவற்றுள் குறிபிடத்தக்கவை.

இவற்றில் மிகப் பெரும்பாலானவை தலைநகர் கொழும்பை மையமாகக் கொண்டு இயக்கப்பட்டதுடன் சிங்கள மொழியிலேயே அவற்றின் முழுமையான ஒளிபரப்பும் இடம்பெற்றது ; சில ஆங்கிலத்திலும் தமது ஒளிபரப்பை மேற்கொண்டன.

இந்த தொலைக்காட்சிச் சேவைகளில் தமிழில் நிகழ்ச்சிகளை அளித்தவை தமிழுக்குக் கொடுத்த வெளியை பின்வரும் அடிப்படைகளில் நோக்கலாம். ஒன்று, விசேட சந்தர்ப்பங்களில் அல்லது தேவையேற்படும்போது தமிழில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் வெளியைக் கொண்டிருந்தவை, இரண்டு, தமது அலைவரிசைகளில் தமிழிற்கெனத் தனியான அலைவரிசைகளை ஒதுக்கி தமிழ் நிகழ்ச்சிகளுக்கு அவற்றில் முழுமையான இடத்தை வழங்கிய தொலைக்காட்சிச் சேவைகள். மூன்று, தமிழில் தனியான அலைவரிசைகளைத் தருவதற்கென்றே ஆரம்பிக்கப்பட்ட, அதற்கென அர்ப்பணிக்கப்பட்ட தொலைக்காட்சிச் சேவைகள் என இவற்றை வகைப்படுத்தமுடியும்.

இவற்றில் – இரண்டாம் மற்றும் மூன்றாம் வகைப்பாடுகளுக்குள் வரக்கூடிய தொலைக்காட்சி அலைவரிசைகள், இலங்கையின் தமிழ்த் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கான ஆகப் பிந்தைய மாதிரிகளாக அமைந்துள்ளன. எம். ரிவியின் தமிழ்த் தொலைக்காட்சி அலைவரிசையான சக்தி ரிவி, உதயம் ரிவி, வெற்றி ரிவி, டான் தமிழ் ஒளி, டிடி ரிவி, கப்பிற்றல் ரிவி, தமிழ் ஸ்ரார் ஆகியன இந்தவகையில் உள்நாட்டு ஒளிபரப்புகளை மேற்கொள்கின்றன ; சிலவற்றின் ஒளிபரப்புக்கள் செய்மதி வழியாக புலம்பெயர்ந்த தமிழர்களையும் சென்றடைகின்றன.

இவற்றிலும், அரசாங்கத் தொலைக்காட்சி சேவைகளில் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலைமைகள் சில ஏற்பட்டாலும், அவை ஒப்பீட்டளவில் தமக்கெனத் தனியான அடையாளத்தைப் பேண முயற்சிகளை மேற்கொண்டும் வருகின்றன.

கொழும்பிற்கு வெளியே யாழ்ப்பாணத்திலிருந்து நிகழ்ச்சித் தயாரிப்பையும் ஒளிபரப்பையும் மேற்கொண்டுவரும் தொலைக்காட்சி அலைவரிசைகளான 2008ஆம் ஆண்டு முதல் தனது ஒளிபரப்பை ஆரம்பித்த டான் தமிழ் ஒளி, டிடி ரிவி ஆகியன வடக்கு – கிழக்கு வாழ் தமிழ்மக்களின் அரசியல், சமூக, பண்பாட்டு தளங்களில் தமது அதிக கவனக்குவிப்பைத் தக்கவைத்து தமது நிகழ்ச்சிகளை வழங்கிவருகின்றன. ஆனால், இவை அரசியற் செல்வாக்கிலிருந்து வெளியே வராத போக்கும், வணிகரீதியாக வெற்றிகரமான ஊடக மாதிரிகளாக பெருமளவிற்கு அமையப்பெறாததும் அவதானிக்கப்படுகின்றது.

இவற்றைவிட – புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் ஊடக நுகர்வையும் சந்தையையும் இலக்குவைத்தும் தாயகத்திலும், புலத்திலும் ஈழத்தமிழர்களால் செய்மதிவழித் தொலைக்காட்சிச் சேவைகள் பலவும் இயக்கப்படுவதையும் இன்றைய நாட்களில் அவதானிக்கலாம்.

இவற்றுள் குறிப்பாக, ஐ.பி.சி. தமிழ் தனது முன்னேற்றகரமான உட்கட்டமைப்பு வசதிகள் பலவற்றை யாழ்ப்பாணத்தில் தனது கலையகம் மூலம் அமைத்து, தனது ஒளிபரப்பு நேரத்தில் கணிசமான பகுதியை உள்ளூரில் தயாரிக்கப்படும் படைப்பாக்கங்களால் பூர்த்திசெய்து வருகின்றது. புலம்பெயர்ந்த

தமிழ்மக்களிடம் காணப்படும் ‘ஊர் நினைவுகளை’ (Nostalgia) மீட்கத்தக்கதான நிகழ்ச்சிகள், அரசியல் நிலவரம் தொடர்பான கலந்துரையாடல்கள், நேர்காணல்கள், நிகழ்ச்சிகள், ஊர்ப் பண்டிகைகள், ஆலயத் திருவிழாக்கள் எனத் தாய்மண் சார்ந்த பல நிகழ்ச்சிகள் என்பன சில முக்கியமான நிகழ்ச்சிகளாகின்றன. குறிப்பாக, நேரலையில் இவை ஒளிபரப்பப்படுமிடத்து பார்வையாளர்கள் அவற்றின்பால் அதிகமாகக் கவரப்படுவதும் இந்நிகழ்ச்சிகளின் பிரதான தந்திரோபமாயிருக்கிறது.

இந்தப் பரப்பிலும், இலங்கையில் தமிழ்த் தொலைக்காட்சி சேவைகள் எனும்போது, போர்க்காலத்தில் உருவான தொலைக்காட்சிச் சேவைகள் தொடர்பில் குறிப்பிடாதிருக்க முடியாது. வானொலிச் சேவையை மிக வினைத்திறனுடன் மேற்கொண்ட போராளிகள், தொலைக்காட்சி ஊடகத்தையும் போரின் நெருக்கடிகளுக்குள் அர்ப்பணிப்புடன் பயன்படுத்திய வரலாறு முக்கியமானதொன்றாகும்.

ஆரம்பத்தில், 1980களின் இடைப்பகுதியில் ‘நிதர்சனம்’ என்ற பெயரில் தொலைக்காட்சிச் சேவையொன்று போராளிகளால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டது. போர்க்களச் செய்திகள், முக்கிய நிகழ்வுகளின் பதிவுகள் ஆகியவற்றோடு தமிழர் பண்பாட்டை மேனிறுத்தும் நிகழ்ச்சிகளும் அப்போதைக்கு அப்போது ஒளிபரப்பப்பட்டன.

இதன் தொடராக 90களின் ஆரம்பத்தில் ‘நிதர்சனம்’ நிறுவனத்தில் படைப்பாக ‘ஒளிவீச்சு’ என்னும் காணொளிச் சஞ்சிகையும் போராளிகளால் மாதாந்தம் வெளியிடப்பட்டது. செய்திகள், பண்பட்டு நிகழ்வுகள், பொருண்மியத் தகவல்கள் ஆகியவற்றோடு, போர்க்களம் தொடர்பான ஆவணப்படங்கள் மற்றும் குறும்படங்கள் ஆகியவற்றையும் இணைத்து ஓர் முன்னோடி முயற்சியாக ‘ஒளிவீச்சு’ வெளிவந்தது.

இந்த முயற்சிகளின் ஒரு முக்கிய பேறாக – ‘தமிழீழ தேசிய தொலைக்காட்சி’என்னும் பெயரில், தமது உத்தியோகபூர்வ தொலைக்காட்சிச் சேவையையும் போராளிகள் மேற்கொண்டிருந்தனர். 2005ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட இத்தொலைக்காட்சிச் சேவையின் தலைமை நிலையம் கிளிநொச்சியில் அமைந்திருந்தது. இச்சேவையே இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது செய்மதித் தொலைக்காட்சிச் சேவையுமாகும். தினமும் இரண்டு மணிநேரம் ஒளிபரப்பான இந்த தொலைக்காட்சி சேவையை செய்மதித் தொடர்பு மூலம் உலகின் பல பகுதிகளிலும் பார்வையிட முடிந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தொலைக்காட்சிச் சேவையும் 2008இல் இறுதி யுத்த காலத்துடன் மௌனித்துப் போனது.

## தமிழ் இணைய ஊடகங்கள்

இலங்கைத் தமிழினம் உள்நாட்டுப் போரால் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்ட தன் பின்னர் அவர்களுக்கான பெரும் ஊடகத் தளமாக அமைந்தவை புதிய ஊடகம் எனப்படும் இணையவழி ஊடகங்கள் ஆகும்.

இலங்கைத் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் இலங்கைத் தமிழ் மக்களுக்கான சமூக, அரசியல், பண்பாட்டு, பொருளாதாரத் தளங்களில் அவர்களுக்கு மிகப் பெரும் வெளிப்படுத்தல் வழிமுறையாகவும் மிகப்பெரும் வடிகாலாகவும் இணையவழி ஊடகங்கள் அமைந்திருக்கின்றன.

இலங்கை தமிழர்கள் தமக்குள்ளும், உலக பிறபகுதிகளுடனும் தொடர்புகளை வளர்த்துக் கொள்வதற்கு இவை மிகப்பெரும் துணையாக உருவாகியுள்ளன. தமிழில் மட்டுமல்லாது ஆங்கிலத்திலும் தாம் புலம்பெயர்ந்து வாழும் ஏனைய நாடுகளின் பேசும் பிற உலக மொழிகளிலும் திறக்கப்பட்டுள்ள இணையத்தளங்கள் இலங்கைத் தமிழ் மக்களின் அடையாளமாக மாத்திரமல்லாது, அன்றாடம் தாயகத்திலும் இன்ன பிற இடங்களிலும் நடைபெறும் நிகழ்வுகளை மற்றவர்களுக்கு அறியவைப்பதிலும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளுக்கான தளங்களைத் தருவதிலும் பெரும் பங்காற்றுகின்றன.

இந்த இந்த இணைய வழி ஊடகங்களை - செய்திகளுக்கான, செய்தி ஆய்வுகளுக்கான இணையத்தளங்கள் என்றும், ஏனைய படைப்புக்கள், துறைகளுக்கான இணையத்தளங்கள் என்றும் பொதுவில் வகைபிரிக்கலாம்.

செய்திகள், செய்தி ஆய்வுகளுக்கான இணையத்தளங்கள் என்னும்போது, அவற்றில் பெரும்பாலானவை ஒழுங்குமுறையான, தொழில்வாண்மை அடிப்படையிலான இணையச் செய்தி ஊடகங்களாக அமைகின்ற போதும், அச்சு ஊடகங்களின் இணையப் பதிப்புகளாகவும் அவை வெளிவருவதையும் அவதானிக்க முடியும்.

‘வீரகேசரி’, ‘தினக்குரல்’, ‘தினகரன்’ ஆகிய கொழும்பை மையமாகக் கொண்டு வெளிவரும் நாளிதழ்களும், ‘உதயன்’, ‘யாழ். தினக்குரல்’, ‘வலம்புரி’ ஆகிய யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு வெளிவரும் நாளிதழ்களும் தமிழிலான அச்சு ஊடகங்களின் இணையப் பதிப்புக்களாகவும் பிரபல்யம் பெற்றுள்ளன.

அண்மையில் உலகினை உலுக்கிய கொவிட் 19 அனர்த்த காலத்தில், இலங்கையின் அச்சுவழி செய்தித் தாள்கள் தமது இணையப்பதிப்பு என்னும் எல்லைகளையும் கடந்து, சமூக ஊடகங்கள் வழியாகவும் தமக்கான வாசகர்களைச் சென்றடைந்தன என்பதும்,

அச்சு ஊடகம் என்ற பாரம்பரிய தளத்திலிருந்தும் மேவி, ‘யூ ரியூப்’ அலைவரிசைகள் வழியாக ஒலி – ஒளி ஊடகமாகவும் செய்தித்தாள்கள் தமக்கான புதிய பரப்பிற்குள் பிரவேசிக்க ஆர்வம்காட்டி வருவதும் தமிழ் செய்தித்தாள்களின் புதிய போக்குகளாக அடையாளங் காட்டப்பட முடியும்.

இணையம் என்பது ஒரு குவிவு ஊடகம் என்பதன் அடிப்படையில் இணையத் தளங்களுடன் இணைய வானொலி, இணையத் தொலைக்காட்சி ஆகியனவும் இலங்கைத் தமிழர்களின் புதிய ஊடக இணைப்புகளாக பெருமெடுப்பில் இன்று பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தாயகத்தைப் பொறுத்தவரையில், செய்திகளை உடனுக்குடன் இற்றைப்படுத்தலில் இருக்கும் முன்னேற்றம் கருதியும், மடிக்கணினி, திறன்பேசி உள்பட ஏனைய கருவிகளிலும் இலகுவாகப் பயன்படுத்தும் முனைப்புடனும் இன்றைய செய்தி ஊடகத் தளங்கள் மிகப்பெரும் அளவிற்கு பயன்பாட்டுக்கு வந்துள்ளன. அச்சு ஊடகங்கள் எதிர்நோக்குகின்ற சந்தைப்படுத்தல் நெருக்கடிகளுக்கும் அப்பால் இந்த இணையச் செய்தி ஊடகங்கள் செய்தி நுகர்விற்கு புதிய வாசல்களைத் திறந்துவிட்டுள்ளன.

தொழில் சார்ந்து இயங்குகின்ற இவ்வாறான இணையச் செய்தி ஊடகங்களை தவிர்த்தும், தனியாட்களின் பராமரிப்பில் காணப்படும் சமூக ஊடகங்களைக் கூட செய்தி நுகர்விற்கான அடிப்படையாகக் கொள்வதில் இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் மிகுந்த ஆர்வமாக உள்ளனர். செய்திகள் தரக்கூடிய தகவல்களின் நம்பகத்தன்மை, துல்லியம், விருப்பு வெறுப்புக்கு

அப்பாற்பட்ட நடுநிலைமை ஆகியன தொடர்பில் கேள்விகள் எழுந்தாலும், காலச் செலவீனம் இழிவளவாக்கப்பட்ட செய்தி நுகர்விற்கான குறுக்கு வழியாகவும் சமூக ஊடகம் சார்ந்த செய்தி வெளியீடுகள் அமைகின்றன.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழக்கூடிய தமிழ் மக்கள் தாம் ஊர்களில் வாழ்ந்த காலத்தை நினைவுபடுத்தும் அல்லது சொந்த ஊரோடு கொண்டிருக்கக்கூடிய இணைப்பை வலியுறுத்துமுகமாகவும் இணைய ஊடகங்களைப் பயன்படுத்தும் போக்கையும் அவதானிக்க முடிகின்றது. ஊர்களை வெளிப்படுத்துமுகமாக ஊர்களின் பெயர்களிலேயே இயங்கும் இணையத்தளங்கள், ஊர்களில் நடைபெறும் நிகழ்வுகளை எடுத்துச்சொல்லும் தளங்கள், நேரலையில் ஊரில் நடைபெறும் சம்பவங்களை பார்வையிடக்கூடிய சமூக ஊடகங்கள் சார்ந்த வழிமுறைகள் என இணையவெளி இயலுமான உச்ச அளவுகளில் பயன்படுத்தப்படும் போக்கு இன்று காணக் கிடைக்கப் பெறுகின்றது.

இணையத்தின் அதி உச்சமான பயன்பாட்டு விளைவுகளை தமக்கெனக் கொள்வதிலும், இணையத்தின் படிநிலை வளர்ச்சிகளை உன்னிப்பாக அவதானித்து அவற்றை தமக்கு ஏற்றவாறு கையகப்படுத்திக் கொள்ளவும் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் இலங்கைத் தமிழர்கள் அதிக அக்கறை காட்டி வருகின்றனர்.

இணையம் தந்திருக்கின்ற தொடர்பாடலுக்கான இலகு அணுகுமுறை, குறைந்த பொருள் செலவீனம், தனிப்படக் கட்டுப்படுத்தும் ஆற்றல், உண்மை நேரத்துடனான வெளியீட்டு வேகம், முடிவிலி வரையிலான பரப்பும் தன்மை, துரிதமான பின்னூட்டச் சேகரிப்பு, தரவுகளைச் சிரமமின்றி உடனுக்குடன் இணைத்துக்கொள்ளும் அல்லது விலக்கிக் கொள்ளும் நெகிழ்வு ஆகியன இணைய ஊடகப் பயன்பாட்டை இலங்கைத் தமிழர்கள் மத்தியில் அதிகம் நாட்டங்காட்டச் செய்திருக்கின்றன.

ஒழுங்குமுறையாக இணையத்தளங்கள் பராமரிக்கப்படுவதும், வினைத்திறனுடன் கூடிய தொழில்சார் தகைமை பேணப்படுவதும் புதிய ஊடகங்களை இலங்கைத் தமிழர்கள் அதிகம் பயன்படுத்துமாற்றலை இன்னும் உயரிய கட்டத்திற்கு எடுத்துச் செல்கின்றது.

இதற்கு, இணையவெளி நூலகங்களை உருவாக்குவதில் இளந்தமிழர்கள் காட்டிவரும் அக்கறை குறிப்பிடத்தக்க முயற்சியாக அமைகின்றது. உதாரணமாக, 'நூலகம்' என்னும் பெயரிலேயே இணைய நூலகம் ஆரம்பிக்கப்பட்டு, அது மிக வினைத்திறனுடன் இயங்கிவருவதை இங்கு குறிப்பிடலாம்.

"இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் எழுத்தாவணங்களை எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்பாடுகளை ஊக்குவிப்பதோடு, தகவல் வளங்களையும் அறிவுச்சேகரங்களையும் ஒழுங்குபடுத்தி அனைவருக்கும் கிடைக்கச் செய்துவரும் இலாப நோக்கற்ற தன்னார்வ முயற்சி"

என இந்த இணையவெளி நூலகம் தன்னை அறிமுகப்படுத்தப்படுகின்றது.

தென்னாசியாவின் குறிப்பிடத்தக்க நூலகமாகத் திகழ்ந்த யாழ்ப்பாண நூலகம் இனவன்முறைகளால் 80களின் ஆரம்பத்தில் தீக்கிரையாக்கப்பட்டதன் பின்னர், எவராலும் காவுகொள்ள முடியாத அறிவுச் செல்வங்களை இணையவெளியில் பாதுகாக்கும் முயற்சி அளப்பரியதொன்றே.

இங்கு – 10, 289 நூல்கள், 12, 073 இதழ்கள், 48, 294 பிரசுரங்கள், 1,357 நினைவுமலர்கள், 4, 837 சிறப்பு மலர்கள் ஆகியவற்றோடு, அதன் பல்லூடாக ஆவணகத்தில் – கையெழுத்துச் சேகரங்கள், காணொளிகள் சேகரம், ஆய்வுப்பொருட் சேகரகங்கள், ஒலிச் சேகரம், வாய்மொழி வழக்காறுகள், ஓவியங்கள், எண்ணிம எழுத்தாவணங்கள், ஒலி நூல்கள் உட்படப் பலவும் எவரும் அணுகும் தன்மையுடன் பேணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இணையம் வழியான ஊடக வெளியை தமது அரசியல் செயற்பாடுகளுக்கும் காத்திரமான வகைகளில் ஈழத்தமிழர்கள் பயன்படுத்துவதை அவர்கள் தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்திய காலம் முதற்கொண்டு இன்றுவரை அவதானிக்க முடிகின்றது.

தாயகம் தொடர்பான நிகழ்வுகள் மாத்திரமல்லாது, இலங்கை தமிழர்கள் கடந்து வந்திருக்கக்கூடிய போரின் கொடூரத்தையும் மக்களின் அவலத்தையும் ஆவணப்படுத்தி நிற்கும் இணையத்தளங்கள் இணைய

ஊடக பயன்பாட்டில் புதிய பரிமாணங்களை எட்டியிருக்கின்றன. உலகம் தழுவியதாக தமது உரிமைப் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லும் ஒரு வலுவான பரப்புரைத் தளமாக இணைய ஊடகங்கள் இலங்கைத் தமிழர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அதிகார மையங்கள் கட்டுப்படுத்தும் வெகுசன ஊடகங்களில் இருந்து ஒடுக்கப்பட்ட மக்கள் குரலுக்கு இடமளிப்பதாக, தமது அரசியல் அடையாளத்தைத் தக்க வைப்பதற்கான ஒரு முன்னெடுப்பாக, இணையத்தைப் பயன்படுத்துவதில் ஈழத்தமிழர்கள் தீவிரம் காட்டிவரும் போக்கினை அவதானிக்க முடிகிறது.

உசாத்துணை:


- விக்னேஸ்வரன், பி. (1998). *வாழ்ந்து பார்க்கலாம் (வானொலி நாடகம்)*, ஒன்ராரியோ, கனடா : பி.எம்.ஜே. பிரிண்டிங் அண்ட் கிரஃபிக்ஸ்
- மதியழகன், வி.என்., (2018). *வி.என்.மதியழகன் சொல்லும் செய்திகள்*, சென்னை, இந்தியா : காந்தளகம்,
- தேவதாஸ், தம்பிஐயா (2015), *இலங்கை வானொலியின் இனிய ஒலிபரப்பாளர்கள்*, கொழும்பு : வித்தியா தீபம் பதிப்பகம்,
- மோசஸ், எஸ்., (2016), *இலங்கை தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் : போக்கும் நோக்கும்*, பதிப்பிக்கப்படாத கலாநிதிப்பட்ட ஆய்வு, கொழும்பு : ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
- ரஸ்மின், எம். சி. (2012). *சமூக வானொலி : மனித வலுவாக்கத்திற்கான ஊடகம்*, கொழும்பு: சேமமடு பதிப்பகம்
- *பொதுமக்கள் நம்பிக்கையை மீள்கட்டியெழுப்புதல் : இலங்கையில் ஊடகத்துறை, ஊடகத்தொழில் தொடர்பான மதிப்பீடு*, (2016). கொழும்பு: ஊடக மறுசீரமைப்புக்களுக்கான செயலகம்
- *Media Owenership Monitor Sri Lanka* (2019). Verite Research and Reporters Withour Boarders (RSF), Sri Lanka
- Crawley, William., Page, David. and Pinto-Jayawardena, Kishali., (2015). *Embattled Media: Democracy, Governance, and Reform in Sri Lanka*, India: Sage.
- Warnakulasuriya, Theodore., (2015). *Effects of Mass Media in Sri Lanka*, Published by Author, Colombo
- Raguram, S., Mohammadu Careem Rasmin and Abdul Wahid Asjain Wahid (2017). *Compromising People's Voice: Understanding the Struggle of Legalizing Community*

*Radio in Sri Lanka*, International Association for Media and Communication Research (IAMCR 2017) on 'Transforming Culture, Politics & Communication: New media, new territories, new discourses', Colombia : Cartagena

- Raguram, S. (2016). *Ethical Dilemmas in Online News Portals: A Study on Tamil Language News Online Sites in Sri Lanka*, 'Asian Forum for Deans of Journalism and Communication', School of Journalism and Communication, Shanghai International Studies University (SISU), Shanghai, China
- Raguram. S. (2008). *Political identity of Tamils : Special Reference to the Media Activities*, National Seminar on 'Diaspora life and political identity in Tamil literature', Gandhigram Rural University, India

……………………………………………………….